**தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் (பகுதி – 7) - 2018**

---

தூய சக்தி மற்றும் வலைப்பின்னல் வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (பகுதி – 7) 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 மே 08 ஆம் திகதிய செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09(அ)ii ஆம் பிரிவு மற்றும் எஸ்ஆர்ஜ 43576 ஆம் இலக்க கடன் உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னாள் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கை மின்சார சபை மற்றும் நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவர்களாக உள்ளன. தூய மின்வலு வழங்கலை அதிகரித்தல் மற்றும் இலங்கையில் மின்சாரத்தை விநியோகிப்பதில் வினைத்திறனையும் நம்பகத்தன்மையையும் முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 25,240 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 3,786 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 3.00 மில்லியன் செயற்திட்டத்தின் பகுதி – 07 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2013 செப்தெம்பர் 30 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் திகதி 2019 யூன் 30 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்க ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்

தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், 04 தெரிவுசெய்யப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களில் மொட்டை மாடியில் மின்சாரம் உருவாக்கல் முறைமையை பொருத்துதல் மற்றும் மொட்டை மாடியில் மின்சாரம் உருவாக்கல் முறைமை பொருத்துவதில் கோட்டல்கள் மற்றும் வர்த்தக நுழைவுகள் போன்றன நிலைபேறான தனியார் துறை பங்குபற்றுனர்களிற்காக வசதியளித்தல் பொன்ற நோக்கங்கள் உள்ளடங்கலாக மொட்டை மாடியில் சூரிய சக்தி மின்சாரம் உருவாக்கல் முறைமையை பரப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 04 ஆண்டுகளிற்கு மேலான தாமதங்களுடன் 2018 திசெம்பர் 31 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், 2016 மே மாதத்தில் பூர்த்தியாக்க்பட வேண்டுமென பட்டியலிடப்படட மொட்டைமாடியில் மின்சாரம் உருவாக்கல் முறைமை பொருத்துதலஜற்கான ஒப்பந்தம் 2017 ஒக்தோபர் மாதத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் ஒப்பந்த பூர்த்தியாக்கல் சான்றிதழ் 2018 ஒக்தோபர் 15 இலேயே வழங்கப்பட்டிருந்தது.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| 04 தெரிவுசெய்யப்பட்ட தேசிய பல்கலைக்கழகங்களில் மொட்டை மாடியில் மின்சாரம் உருவாக்கல் முறைமையை பொருத்துதல் மீதான ஒப்பந்த காலப்பகுதி நீடிக்கப்பட்டதற்கோ அல்லது ஒப்பந்த பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் மீது பாதுகாப்பு பிணைவைப்பை அறவிடப்பட்டதற்கோ அல்லது உறுதிப்படுத்துவதற்கு | ஒப்பந்த உடன்படிக்கை மீறல்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எழுந்திருக்கும். | தொடர்ச்சயாக ஒப்பந்தங்களின் முன்னேற்றங்களை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிர்வாகத்தில் கூட்டு பதிவேடுகளை பேணுவதற்கு புரிந்துகொள்ள வேண்டும். |

உறுதியான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

### 2.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 கிகதிய MOFP/ERD/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டிலும் மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 26 இலேயெ சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரதான வெண்டுகை பின்னப்றப்பட வில்லை. | இந்த விடய பகுதிக்கு பிரிக்ப்பட்ட நிபுணத்துவ உத்தயோகத்தர் இன்மையால் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்ட்டு உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | உரிய திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வெண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 134(3) இல் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் உள்ளக கட்டுப்பாடு முறைப்படி அமுலாக்கப்பட்டி ருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு பிரிவில் உத்தியோகத்தர் இன்மையால் செயற்திட்ட நடவடிக்கைகள் மீது விரிவான கணக்காய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறனான மற்றும் ஆக்கபுர்வமான வழியில் செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் அடைதலை உறுதிப்படுத்தவதற்கு கணக்காய்வை மேற்கொள்ள வெண்டும். |